1990 சனவரி 23]

திரு. கோ. பூவராகன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, சிறுதொழில் நிறுவனங்களுக்குத் தனியாகக் குறைந்த விலையில், குறித்த காலத்தில் தனி ஒதுக்கீடு பெற்றுத் தருவதற்கு நமது அரசு மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, ஏற்கனவே ஜாயின்ட் பிளான்ட் கமிட்டியின் ஒதுக்கீட்டில் 20 சதவீதம் அதாவது அரசிடமிருந்தோ அல்லது அரசைச் சார்ந்த நிறுவனங்களிடம் இருந்தோ, பெரிய தொழில் நிறுவனங் களிடமிருந்தோ பெறப்படும் ஆணைக்கு அவ்வப்போது உற்பத்தி செய்யப்படும் அளவுக்குத் தேவைக்கேற்ப ஒதுக்கீடு செய்யப் படுகிறது. எஞ்சியுள்ள 80 சதவீதம், அகர வரிசைப்படி சிறுதொழில் நிறுவனங்களுக்கு வினியோகிக்கப்படுகிறது.

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறுதொழில் உரிமையாளர்கள் அவ்வப்போது ஏற்படும் இரும்பு விலை உயர்வினால் பெரிதும் பாதிக்கப் படுகின்ற காரணத்தால், அங்கீகரிக்கப்பட்ட சிறு தொழில் களுக்கு இரும்பு எக்சைஸ் வரி விதிப்பில் இருந்து சலுகை கொடுக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்துள்ளார்கள். அவர் களுக்கு அந்தச் சலுகை கொடுக்கப்பட, இந்த அரசு பரிந்துரை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, முறைப்படி அதுகுறித்து முறையீடு மாநில அரசுக்கு வருமே யானால், மத்திய அரசு ஆராயவேண்டுமென்று மாநில அரசுக்கு முறையீடு வந்தால்—மாநில அரசு பரிசீலித்து, மத்திய அரசுக்கு அனுப்ப இயலும்.

9-05 மணி

திரு. இரா. சாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெளி மாநிலத்தவர்கள் இத்தகைய சிறு தொழில் களைச் செய்ய அவர்களை ஊக்குவிக்க இந்த அரசு முன்வருமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது தொடர்பில்லாத வினா.

வொல்லாஸ்டோனைட் கனிமப் பொருள்

*1132—திரு. பொன். விஜயராகவன் :

மாண்புமிகு முதல்அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், கள்ளி குளம் அருகிலுள்ள பிரான்மலைப் பகுதியில் சுண்ணாம்புக்கல் படிவத்திலிருந்து வொல்லாஸ்டோனைட் (Wollastonite) எனும் அரிய கனிமப் பொருள் கிடைப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) இதைப் பயன்படுத்தி ஒரு தொழிற்சாலை அமைக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம். தெரியும்.

(ஆ) வொல்லாஸ்டோனைட் கனிமம் மூலப் பொருளாக நேரடியாக பயன்படக்கூடிய தொழில் ஏதும் இல்லை. ஆகவே, வொல்லாஸ்டோனைட் கனிமத்தை மட்டும் மூலப்பொருளாகக் கொண்டு தொழிற்சாலை அமைக்க வாய்ப்பில்லை. திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், கள்ளிக்குளம் கிராமத்தில் வொல்லாஸ்டோனைட் கனிமத்தின் இருப்பளவு மிகக் குறைவாக அதாவது சில நூறு டன்களே இருப்பதாக மதிப்பிடப் பட்டுள்ளது. இக்கனிமம் முக்கியமாக பீங்கானில் வெடிப்புகள், உடைவு மற்றும் மெருகுக் குறைபாடுகளைத் தவிர்த்து பீங்கானின் உறுதித் தன்மையை அதிகரிக்க பீங்கான் உற்பத்தியில் சேர்க்கப்படுகிறது. மேலும், இக்கனிமம், பீங்கான் நுண் கருவிகளின் உறுதி மற்றும் உருகுநிலைத் தன்மைக்கு பெரிதும் உதவுகிறது.

திரு. பொன். விஜயராகவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அறிந்த வரையில் இந்தக் கனிமப் பொருள் மிக உறுதி வாய்ந்த பீங்கான் தன்மையுள்ள பொருளாகும். உறுதி வாய்ந்த பீங்கான் பொருட்கள் செய்வதற்கும், எலக்ட்ரானிக் காம்போனன்ட்ஸ் அதாவது வால்வ் போன்ற பகுதிகள், ஹைவோல்ட்டேஜ் கரண்ட் வருகிறபோது அதற்குத் தேவையான இன்சுலேட்டர்கள் போன்றவற்றைச் செய்வதற்குப் பயன்படுகிறது என்றும் எனவே இது ஒரு முக்கியமான, இந்தியாவில் தேவைப்படுகிற ஒரு அரிய கனிமப் பொருள் என்றும் சொல்லியிருக்கிறார்கள். அங்கே—கிடைக்கிற அளவு குறைவாக இருந்தாலும் அதாவது—வியாபார ரீதியில் குறைவாகக் கிடைத்தாலும் இந்தச் சுண்ணாம்புக் கல் என்பது தமிழகம் முழுவதும் பல்வேறு இடங்களில் கிடைப்பதால் அப்படி மற்ற இடங்களில் கிடைப்பதையும், கண்டுபிடித்துப் பயன்படுத்துவதற்கான முயற்சியில் தமிழக அரசு ஈடுபடுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முயற்சித் திருவினையாக்கும் என்ற நம்பிக்கையோடு ஈடுபடுவது வேறு காரியம். ஆனால் ஒரு ஒப்புநோக்கில் இந்தியாவில் இந்தக் கனிமம் இராஜஸ்தான் மாநிலத்தில் சிரோகா, வாலி மற்றும் உதயபூர் ஆகிய இந்த மூன்று மாட்டங்களில் 4.95 இலட்சம் டன்கள் கிடைக்கின்றன. அதோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது இங்கே தமிழ்நாட்டில்

1990 சனவரி 23]

சில 100 டன்கள்தான் கிடைக்கும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. நெல்லை மாவட்டத்தில் கள்ளிகுளம், தர்மபுரி மாவட்டத்தில் சென்ட்ராயன் மலையின் கிழக்குச் சரிவிலும் குடமாண்டப்பட்டியிலும் இந்தப் பொருள் கிடைப்பதாக அறியப்படுகிறது. இதுவரையில் இந்தக் கனிமத்தைத் தமிழ்நாடு கனிம நிறுவனம் வெட்டி எடுத்து இருப்பதுபத்தேபத்து டன்கள்தான்.

எனவே, இவ்வளவு மிகக் குறைவாக இருக்கின்ற இந்தக் கனிமத்தை வைத்துக்கொண்டு பெரிய அளவில் தொழில்கள் ஏதும் தொடங்க நம்முடைய மாநிலத்தில் இயலாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நுழைவுத் தேர்வு முறை

*2617—திரு. அ. இரகுமான்கான் :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சட்டக் கல்லூரி, மருத்துவக் கல்லூரி, பொறியியற் கல்லூரி ஆகிய கல்லூரிகளில் நுழைவுத் தேர்வு முறை இருப்பதனை மாற்றிட அரசு பரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : பேரவைத் தலைவர் அவர்களே,

நுழைவுத் தேர்வுமுறை 1984—85 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறையிலுள்ளது. இம்முறைத் தேர்வுபற்றி இவ்வாண்டு பரிசீலித்ததில், மருத்துவக் கல்லூரிகள் மற்றும் பொறியியற் கல்லூரிகளில் சேர்வதற்கான குறைந்தபட்ச விண்ணப்ப மதிப்பெண்கள் மட்டும் குறைக்கப்பட்டன. அடுத்துவரும் ஆண்டுகளில் தேவைப்பட்டால் மீண்டும் இத்தேர்வுமுறை பற்றி ஆய்வு செய்யப்படும்.

திரு. பெ. சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே புகுமுக வகுப்புத் தேர்வு நடைபெறுவதும், அந்தத் தேர்வுகளில் மதிப்பெண்கள் போடப்படுகிற முறையும் அது இந்த நுழைவுத் தேர்வை விடக் கடுமையாக இருப்பதும் எல்லோருக்கும் தெரியும். எனவே, இந்த நுழைவுத் தேர்வு என்பது ஒரு தடவை தேறிய மாணவர்களை மறுபடியும் தேர்விலே அமர வைத்து பரீட்சை எழுதச் சொல்லி அதுவும் அவசர, அவசரமாகத் திருத்தப்பட்டு அதிலே நாம் எதிர்பார்க்கிற உண்மையான மதிப்பெண் கொடுக்க முடியாது என்பது ஊர் அறிந்த உண்மை. இது ஏதோ ஒரு காலத்தில் ஏதோ ஒரு காரணத்திற்காக ஏற்படுத்தப்பட்ட முறை, ஒரு குற்றத்திற்குஇரண்டு தடவை தண்டனை கொடுப்பதே சட்டப்படி